# மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின்
# 2019-2020-ம் நிதி ஆண்டிற்கான வரவு செலவு அறிக்கை

**(DMFT - Annual Budget)**

மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை திட்டங்களின் வரவு செலவு அறிக்கையின் விபரம் பின்வருமாறு.

மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க. எண். 764/2017-கனிமம், நாள்.12.09.2017-ன்படி மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக் கட்டளையானது உருவாக்கப்பட்டு 31.03.2020-வரை **ரூ.2,77,87,995/-** (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்து ஏழு இலட்சத்து எண்பத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஐந்து மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் நிதியாண்டில் மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக நிர்வாக மற்றும் நிதிசார்ந்த ஒப்புதல் ஏதும் வழங்கப்படவில்லை.

ஏற்கனவே 2018-2019 ஆம் நிதியாண்டில் மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக நிர்வாக மற்றும் நிதிசார்ந்த ஒப்புதல் வழங்கப்பட்ட 3 திட்டங்களுக்கு கீழ்கண்டவாறு நிதி வழங்கப்பட்டுள்ளது

| வ. எண் | திட்டத்தின் பெயர் | கிராமம் மற்றும் வட்டம் | ஒதுக்கீடு செய்த தொகை (ரூ.) | ஒதுக்கீடு செய்யப்பட்ட தேதி | திட்டத்தின் நிலை |
|---|---|---|---|---|---|
| 1. | அத்திப்பட்டி கிராம ஆதிதிராவிடர் குடியிருப்பில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | அத்திப்பட்டி / பேரையூர் | ரூ. 4,19,496/- | 12.09.2018 | நிறைவேற்றப் பட்டது |
| 2. | தொட்டனாம்பட்டி கிராமத்தில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | தொட்டனாம் பட்டி / குடிசேரி | ரூ. 3,99,262/- | 12.09.2018 | நிறைவேற்றப் பட்டது |
| 3. | பொருப்புமேட்டுப்பட்டி கிராம ஆதிதிராவிடர் குடியிருப்பில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | பொருப்பு மேட்டுப் பட்டி / உசிலம்பட்டி | ரூ. 4,19,790/- | 12.09.2018 | நிறைவேற்றப் பட்டது |
| | | மொத்தம் | ரூ. 12,38,548/- | | |

மேற்கண்ட அட்டவணையில் உள்ள திட்டங்கள் தவிர கீழ்கண்ட 2 திட்டங்களுக்கு **ரூ.2,10,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்)** மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | கிராமம் மற்றும் வட்டம் | ஒதுக்கீடு செய்த தொகை (ரூ.) | ஒதுக்கீடு செய்யப்பட்ட தேதி | திட்டத்தின் நிலை |
|---|---|---|---|---|---|
| 1. | உலகானி கிராமத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைத்தல் | உலகாணி / கள்ளிக்குடி | ரூ. 1,50,000/- | 12.09.2018 | பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது |
| 2. | செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றிய பகுதியில் மின்விளக்குகள் அமைத்தல் | செல்லம்பட்டி / உசிலம்பட்டி | ரூ. 60,000/- | 12.09.2018 | பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது |

மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியில் ஏப்ரல் 2019 முதல் மார்ச் 2020 ஆண்டிற்கு மட்டும் **ரூ.85,28,383/-** (ரூபாய் எண்பத்து ஐந்து இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து முந்நூற்று எண்பத்து மூன்று மட்டும்) கனிமக் கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்பட்டுள்ளது.

தலைவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.05/2018-டிஎம்எப்டி, நாள்.01.06.2018-ன்படி 01.06.2018 முதல் 30.04.2019 வரையிலான பதினோரு மாத காலத்திற்கு தரவு நுழைவு செய்பவராக (Data Entry Operator) தற்காலிக நியமனம் செய்யப்பட்டவருக்கு **ரூ.1,18,800/- (ரூபாய் ஒரு இலட்சத்து பதினெட்டாயிரத்து எண்ணூறு மட்டும்)** ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மாண்புமிகு சட்டம், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் அவர்களின் சட்டப்பேரவை அறிவிப்பின்படி, மதுரை மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலகம் மற்றும் மதுரை மண்டல பறக்கும்படையினருக்கு I-Pad வழங்கும்பொருட்டு **ரூ.2,16,778/- (ரூபாய் இரண்டு இலட்சத்து பதினாறாயிரத்து எழுநூற்று எழுபத்து எட்டு மட்டும்)** செலவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியிலிருந்து நிர்வாக செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட 6% நிதியிலிருந்து 1% தொகையை கனிம அறக்கட்டளையின் மாநில அளவிலான கண்காணிப்பு பணிகளுக்காக பயன்படுத்த இயக்குநர் அலுவலகத்தில் துவக்கப்பட்டுள்ள தனி வங்கி கணக்கில் மாதந்தோரும் செலுத்துமாறு அரசாணை பல்வகை எண். 112, தொழில் (எம்.எம்.டி-1) துறை நாள்: 30.05.2019-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 30.05.2019 முதல் 31.03.2020 வரையிலான காலத்திற்கு வசூல் செய்யப்பட்ட தொகையில் 1% தொகையான **ரூ.58,388/-** (ரூபாய் ஐம்பத்து எட்டாயிரத்து முன்னூற்று எண்பத்து எட்டு மட்டும்) இயக்குநர் அலுவலகத்தில் துவக்கப்பட்டுள்ள தனி வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

2019-2020 நிதியாண்டில் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டுள்ள தொகை விபரம் பின்வருமாறு

**2019-2020**

| மாதம் | சீனியரேஜ் தொகை மூலம் பெறப்பட்ட அறக்கட்டளை நிதி (ரூபாயாக) | நீதிமன்றம் மூலம் அபராத தொகையாக பெறப்பட்ட அறக்கட்டளை நிதி (ரூபாயாக) | மொத்தம் (ரூபாயாக) |
|---|---|---|---|
| ஏப்ரல்-2019 | 6,84,847 | 5,05,000 | 11,89,847 |
| மே-2019 | 4,20,418 | 10,000 | 4,30,418 |
| ஜீன்-2019 | 4,19,953 | 2,75,000 | 6,94,953 |
| ஜீலை-2019 | 7,85,466 | 3,00,000 | 10,85,466 |
| ஆகஸ்ட்-2019 | 5,76,999 | 50,000 | 6,26,999 |
| செப்டம்பர்-2019 | 6,33,369 | 1,50,000 | 7,83,369 |
| அக்டோபர்-2019 | 5,23,387 | 65,000 | 5,88,387 |
| நவம்பர்-2019 | 6,42,123 | 30,000 | 6,72,123 |
| டிசம்பர்-2019 | 7,32,839 | 37,500 | 7,70,339 |
| ஜனவரி-2020 | 5,19,507 | 30,000 | 5,49,507 |
| பிப்ரவரி-2020 | 6,22,648 | 30,000 | 6,52,648 |
| மார்ச்-2020 | 4,84,327 | | 4,84,327 |
| **மொத்தம்** | **70,45,883** | **14,82,500** | **85,28,383** |

இவ்வறிக்கையானது மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் மேலாண்மை மற்றும் நிர்வாக குழு முன்பு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டது.

தலைவர், மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு
அறக்கட்டளை / மாவட்ட ஆட்சித்தலைவர்,
மதுரை.

13/12/22

13/12/22